JMC, Thiruvadanai-CC No.237/2025
Judgment Dated: 10.06.2026

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாடானை.**

முன்னிலை : திரு.J.அன்டோனி ரிஷன்தேவ், B.B.A., L.L.B(Hons),
நீதித்துறை நடுவர்,
திருவாடானை
2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 10 ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 237/2025**

CNR No. TNRM17-001541-2025

| | | | |
|---|---|---|---|
| 1. | வரிசை எண். | : | C.C.No.237/2025 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | : | ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையம் குற்ற எண்.208/2025 |
| **எதிரியின் விபரம்** | | | |
| 3. | பெயர் | : | முகமது அப்சல் |
| 4. | த/பெ. | : | அப்பாஸ் அலி |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | முகவரி | : | 14/48,பரக்கத் தெரு, ஆர்எஸ்மங்கலம், இராமநாதபுரம் மாவட்டம். |
| 7. | வயது | : | வயது 18/2025 |
| 8. | சம்பவ நாள் | : | 27.06.2025 ம் தேதி 23.00 மணி |
| 9. | புகார் தேதி | : | 01.07.2025 ம் தேதி 11.00 மணி |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | எதிரி 01.07.2025 ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | எதிரி 01.07.2025 ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு திருவாடானை நீதித்துறை நடுவர் நீதிமன்ற Cr.M.P.No. 340/2025, Date 04.07.2025 உத்தரவின்படி பிணை உத்தரவு பெற்று 04.07.2025 ம் தேதி தகுந்த ஜாமின்தாரர்களை நிறுத்தி பிணையில் சென்றுள்ளார். |
| 12. | கமிட்டல் உத்தரவு | : | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 30.10.2025 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 06.06.2026 |
| 15. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது 78(2), 329(4), 296(b), 326(f), 351(3) BNS கீழ் |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:06:29 +0530

JMC, Thiruvadanai-CC No.237/2025
Judgment Dated: 10.06.2026

| | | | |
|---|---|---|---|
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது 78(2), 329(4), 296(b), 326(f), 351(3) BNS கீழ் |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | –இல்லை– |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | அ.சா.1 – முதல் விசாரணை – 06.01.2026<br>குறுக்கு விசாரணை – 02.06.2026<br>அ.சா.2 – முதல் விசாரணை – 06.01.2026<br>குறுக்கு விசாரணை – 06.01.2026<br>அ.சா.3 – முதல் விசாரணை – 06.01.2026<br>குறுக்கு விசாரணை – 06.01.2026<br>அ.சா.4 – முதல் விசாரணை – 01.04.2026<br>குறுக்கு விசாரணை – 02.06.2026<br>அ.சா.5 – முதல் விசாரணை – 02.06.2026<br>குறுக்கு விசாரணை – 02.06.2026 |
| 18. | எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS–ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 05.06.2026 |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 348 BNSS பிரிவின் பிரிவின்படியான மனுக்கள் | : | எதிரி தரப்பில் 348 BNSS–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு Crl.M.P.No.403/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அ.சா.1, அ.சா.4 ஆகியோர்கள் 02.06.2026 ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | செல்வி.முத்துமாரி |
| 22. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.K.R.ஜெகன் |
| 23. | எதிரியின் கூற்று | : | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார் |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 10.06.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 10.06.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | : | முடிவாக, எதிரி பிரிவுகள் 78(2), 329(4), 296(b), 326(f), 351(3) BNS கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரியை பிரிவு 271(1) |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:06:39 +0530

JMC, Thiruvadanai-CC No.237/2025
Judgment Dated: 10.06.2026

| | | | |
|---|---|---|---|
| | | | BNSS–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் P.R.146/2025 ல் கட்டுப்பட்டுள்ளதும், அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதுமான வழக்கு சொத்தான பாதி எரிந்த நிலையில் சுமார் 9 Inch அளவு கொண்ட purple நிற பெண் செருப்பு ஒரு ஜோடி மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதுமான வழக்கு சொத்தான பாதி எரிந்த நிலையில் சுமார் 8 Inch அளவு கொண்ட கருப்பு நிற பெண் Shoe ஒரு ஜோடி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய வழிமுறைகளை பின்பற்றி அழித்தல் செய்ய உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் P.R.No.146/2025 ல் கட்டுப்பட்ட மற்றொரு வழக்குச் சொத்தான பதிவெண் பலகை இல்லாத Chassis No. ME1RG67L6R0039741, Engine No. G3N4E0750158 என்ற Grey நிற Yamaha R15 இருசக்கரவாகனம் 17.07.2025 ம் தேதி Cr.M.P.No. 363/2025 ல் ஏற்பட்ட உத்தரவின் மூலம் அதன் உரிமையாளரான தஸ்லிம்பானு என்பவர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மேற்படி இடைக்கால பொறுப்பும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அதன் உரிமையாளர் வசம் நிரந்தரமாக ஒப்படைக்கப்படும் என உத்தரவிடப் படுகிறது. மேலும் அவர் எழுதி கொடுத்த பிணைய பத்திரம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 21.08.2025 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 06.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R.ஜெகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும்,

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:06:49 +0530

வழக்காவணங்களை பரிசீலனை செய்தும்s இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1. <u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம்:–</u>

புகார்தாரர் அல்பெனாசிர் என்பவரின் இரண்டாவது மகள் ஹனாஹாபிசா ஆர்எஸ் மங்கலத்தில் உள்ள மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்து வருபவரை எதிரி தினமும் புகார்தாரரின் மகள் பள்ளிக்கு அவரது சைக்கிளில் செல்லும்போது அவரை பின் தொடர்ந்து நீ பள்ளிக்கு சைக்கிளில் செல்ல கூடாது ஆட்டோவில் தான் செல்ல வேண்டும் என்றும் அவரது மகளை காதலிப்பதாக கூறியும் தொந்தரவு செய்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 27.06.2025 ம் தேதி 23.00 மணிக்கு புகார்தாரரும் அவரது மகள்கள் ஹானஹாபிசா, அஸ்ரின்பிடா இருவருங்ம வீட்டில் இருந்தபோது மேற்படி எதிரி முகமது அப்சல் என்பவர் வண்டி எண் இல்லாத Grey Colour R15 இருசக்கர வாகனத்தில் புகார்தாரர் வீட்டிற்கு வந்து புகார்தாரரையும் அவரது மகள்களையும் ஏண்டி தேவுடியா முண்டைகளா வெளியே வாங்கடி என்று கூறிக்கொண்டே கையில் வைத்திருந்த பெட்ரோல் கேனை எடுத்து அவரது வீட்டில் கிடந்த செருப்பின் மீது ஊற்றி எரித்தும் ரூ.1000/– மதிப்பிலான சேதத்தை ஏற்படுத்தியும் அருகில் நின்ற அவரது மகள் பள்ளி செல்லும் சைக்கிளையும் இடுப்பில் வைத்திருந்த கத்தியால் குத்தி பஞ்சர் ஆக்கியும் புகார்தாரரை பார்த்து உனது மகளை எனக்கு திருமணம் பண்ணி தரவில்லையென்றால் இதுபோல் உன்னையும் உனது குடும்பத்தையும் எரித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டி குற்றம் புரிந்ததாக எதிரி மீது பிரிவுகள் 78(2),329(4),296(b),326(f),351(3) BNS–ன் கீழ் ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு பிரிவு 230 BNSS–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:07:01 +0530

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி முதல் நோக்கில் குற்றத்தினை செய்திருக்கலாம் என அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்ததால் எதிரி மீது பிரிவுகள் 78(2),329(4),296(b),326(f),351(3) BNS-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக்கூறி வினவிய போது எதிரி குற்றசாட்டுகளை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நிலையில், எதிரி தரப்பில் அ.சா.1, அ.சா.4 ஆகியோரை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டி S.348 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனுவானது Crl.M.P.No.403/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.1, அ.சா.4 நீதிமன்றத்தில் ஆஜராகி எதிரியுடன் சமரசமாக செல்வதாக கூறி S.359 BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு மனுவானது Crl.M.P.No.404/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுவின் நிலைத்தன்மையை கருதி மனு தள்ளுபடி செய்யப்பட்டும் அரசு தரப்பு சாட்சியமும், அரசு தரப்பு வழக்கறிஞரால் முடித்துக்கொள்ளப்பட்டது.

6. <u>அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிகளின் சுருக்கம் : –</u>

புகார்தாரர் அல்பெனாசிர் என்பவரின் இரண்டாவது மகள் ஹனாஹாபிசா ஆர்எஸ் மங்கலத்தில் உள்ள மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்து வருபவரை எதிரி தினமும் புகார்தாரரின் மகள் பள்ளிக்கு அவரது சைக்கிளில் செல்லும்போது அவரை பின் தொடர்ந்து நீ பள்ளிக்கு சைக்கிளில் செல்ல கூடாது ஆட்டோவில் தான் செல்ல வேண்டும் என்றும் அவரது மகளை காதலிப்பதாக கூறியும் தொந்தரவு செய்து வந்துள்ளார்.இந்நிலையில் கடந்த 27.06.2025ம் தேதி 23.00மணிக்கு புகார்தாரரும் அவரது மகள்கள் ஹானஹாபிசா, அஸ்ரின்பிடா இருவருங்ம வீட்டில் இருந்தபோது மேற்படி எதிரி முகமது அப்சல் என்பவர் வண்டி எண் இல்லாத Grey Colour R15 இருசக்கர வாகனத்தில் புகார்தாரர் வீட்டிற்கு வந்து

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:07:18 +0530

புகார்தாரரையும் அவரது மகள்களையும் ஏண்டி தேவுடியா முண்டைகளா வெளியே வாங்கடி என்று கூறிக்கொண்டே கையில் வைத்திருந்த பெட்ரோல் கேனை எடுத்து அவரது வீட்டில் கிடந்த செருப்பின் மீது ஊற்றி எரித்தும் ரூ.1000/- மதிப்பிலான சேதத்தை ஏற்படுத்தியும் அருகில் நின்ற அவரது மகள் பள்ளி செல்லும் சைக்கிளையும் இடுப்பில் வைத்திருந்த கத்தியால் குத்தி பஞ்சர் ஆக்கியும் புகார்தாரரை பார்த்து உனது மகளை எனக்கு திருமணம் பண்ணி தரவில்லையென்றால் இதுபோல் உன்னையும் உனது குடும்பத்தையும் எரித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார் என்பதேயாகும். மேற்படி சம்பவத்தை அ.சா.2 சர்தார்கான் மற்றும் சாட்சி அஸ்ரின்ரபிடா ஆகியோர்கள் பார்த்தார்கள்.

6(2) அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும் தனது உறவினர் தான் என்றும் தனது மகள் ஹனாஹாபிசா ஆர்எஸ் மங்கலத்தில் உள்ள மகளிர் மேல்நிலைபள்ளியில் 12ம் வகுப்பு படித்து வருகிறார் என்றும் தேதி மாதம் நினைவில் இல்லை கடந்த வருடம் ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு முன்பு வாசலில் கிடைந்த செருப்புகளை எறித்தும் வீட்டிற்கு முன்பு நின்று கொண்டிருந்த சைக்கிள் டயரை கத்தியால் குத்தி பஞ்சர் ஆக்கியும் வெளியில் நின்று அசிங்கமான வார்த்தைகள் பேசி யாரோ ஒரு நபர் நின்று கொண்டிருந்தார் என்றும் தான் வெளியே வந்து பார்த்தபோது எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும் தனது மகளை எதிரி விரும்பி உள்ளார் என்றும் அதை தனது மகள் ஏற்று கொள்ளவில்லை என்றும் அதனால் ஆத்திரத்தில் எதிரி அவ்வாறு செய்துள்ளார் என்றும் அது சம்மந்தமாக அப்போது காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் கொடுத்தோம் என்றும் தற்போது தனது குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் மூலம் பேசி முடித்துவிட்டதால் எதிரிமீது தற்போது நடவடிக்கை தேவையில்லை என்றும் எதிரியுடன் சமரசமாக சென்று விட்டோமா என்றால் சரிதான். என சாட்சியம் அளித்துள்ளார்.

6(3) அ.சா.2 தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும் தனது உறவினர் தான் என்றும் எதிரி மீது தனது மகள் எதற்காக புகார்கொடுத்தார் என்ற விவரம் தனக்கு

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:07:32 +0530

சரியாக தெரியாது என்றும் இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

6(4) அ.சா.3 தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும் ஆனால் அவர் மீது என்ன வழக்கு என்று தெரியாது என்றும் பார்வைமகசரில் தன்னுடைய கையெழுத்து இல்லை என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

6(5) அ.சா.4 தனது சாட்சியத்தில் புகார்தாரர் தனது தாயார் ஆவார் என்றும் சுமார் 7 மாதங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும் ஒரு நாள் இரவு 12.00 மணியளவில் தங்கள் வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டதாகவும் அப்போது வீட்டில் தான் தனது அம்மா, தனது அக்கா அஸ்ரின் ரபிடா ஆகியோர் இருந்தோம் என்றும் தாங்கள் என்னவென்று வீட்டிற்கு வெளியே சென்று பார்த்தபோது வீட்டின் வெளியே கிடந்த தங்கள் செருப்புகள் பாதி எரிந்த நிலையில் கிடந்தது என்றும் அதன்பின் காலையில் தான் பள்ளிக்கு சென்றுவிட்டேன் தனது அம்மாவும் எனது அப்பா அசரப் அலியும் காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக எதிரி மீது சந்தேகத்தின் அடிப்படையில் புகார் அளித்த விபரம் தனக்கு தெரியும் என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

6(6) மேற்படி சம்பவம் தொடர்பாக அ.சா.5 தனது சாட்சியத்தில் கடந்த 01.07.2025 ம் தேதி காலை 11.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் முகமது சைபுல் கிசாம் நிலைய பொறுப்பில் இருந்தபோது வழக்கின் புகார்தாரரான அல்பெனாசி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலையை குற்ற எண். 208/2025 u/s 78(2), 329(4),296(b),326(f),351(3) BNS யாக வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.2 முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

6(7) பின்னர் வழக்கு கோப்பினை அவரது விசாரணைக்கு எடுத்து கொண்டு அதே

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:07:42 +0530

நாள் 12.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சீனிஇப்ராகிம், முகமது யாசுப் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரிவரைபடம் தயார்செய்துள்ளார் என்றும் பின்னர் அதே நாள் அதே சாட்சிகள் முன்னிலையில் 13.03 மணியளவில் சம்பவயிடத்திலிருந்து பாதி எறிந்த நிலையில் இருந்த செருப்பு மற்றும் Shoe ஆகியவற்றை அ.சா.ஆ.5 அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார்

6(8) பின்னர் வழக்கின் சாட்சிகளான அல்பெசிர், ஹானஹபிசா, அஸ்ரின் ரப்ரா, சர்தார் கான் மற்றும் பார்மைகசர் சாட்சிகளை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவுசெய்துள்ளார் என்றும் அவர்கள் விசாரணையிலும் சாட்சிகளை விசாரணை செய்ததிலும் குற்றசம்பவம் உண்மையனெ தெரியவந்து வழக்கில் ஈடுபட்ட எதிரியை தேடிவந்த நிலையில் இவ்வழக்கில் சம்மந்தப்பட் எதிரியான முகமது அப்சல் என்பவரை அன்றையதினம் 16.00 மணியளவில் அரசுரணிக்கரை வடக்குபடிக்கரை அருகே வைத்து சாட்சிகள் காவலர்கள் இளங்கோ மற்றும் சந்திரசேகரன் முன்னிலையில் விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒப்படைத்த குற்ற சம்பவசெயலில் ஈடுபட்ட பதிவெண் குறிப்பிடப்படாதா Yamaha R15 இருசக்கர வாகனத்தை அ.சா.ஆ.6 அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார்.

6(9) பின்னர் எதிரியை கைது செய்வதற்கான தக்க காரணம் கூறி அனைத்து சட்டப்படியான நடவடிக்கை மேற்கொண்டு தக்க வழிக்காவல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும் எதிரியிடமிருந்தும் சம்பவயிடத்திலிருந்தும் கைப்பற்றப்பட்ட அ.சா.பொ.1 பாதி எறிந்த நிலையில் எடுக்கப்பட்ட செருப்பு மற்றும் அ.சா.பொ.2 பாதி எறிந்த நிலையில் எடுக்கப்பட்ட Shoe மற்றும் அ.சா.ஆ.7 இருசக்கரவாகனத்தின் ஒப்படைத்தற்கான படிவம் 91 மற்றும் அ.சா.ஆ.8 செருப்பு மற்றும் Shoe ஒப்படைத்தற்கான படிவம் 91 மற்றும் அ.சா.ஆ.9 படிவம் 91ல் கண்ட பதிவெண் குறிப்பிடப்படாதா yamaha R15 இருசக்கரவாகனத்தின் புகைப்படம் ஆகிய வழக்கு சொத்துகளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைப்புசெய்துள்ளார்.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:08:05 +0530

6(10) பின்னர் காவலர்களான சந்திரசேகரன், இளங்கோ ஆகியோர்களை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும் பின்னர் அவரது விசாரணையை முடித்து கொண்டு எதிரி மீது பிரிவுகள் 78(2), 329(4),296(b),326(f),351(3) BNS கீழ் குற்ற இறுதியறிக்கையை ஆர்எஸ் மங்கல காவல் நிலைய சார்பு ஆய்வாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

7.அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து எதிரிக்கு பாதமகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS–ன் கீழ் படித்துக் காட்டி விளக்கிக்கூறி வினவிய போது எதிரி அரசு தரப்பு சாட்சிகள் சொல்வது பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்றும் எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்தார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது பிரிவுகள் 78(2), 329(4), 296(b), 326(f), 351(3) BNS கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

**<u>தீர்வு</u>**

9. புகார்தாரர் அல்பெனாசிர் என்பவரின் இரண்டாவது மகள் ஹனாஹாபிசா ஆர்எஸ் மங்கலத்தில் உள்ள மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்து வருபவரை எதிரி தினமும் புகார்தாரரின் மகள் பள்ளிக்கு அவரது சைக்கிளில் செல்லும்போது அவரை பின் தொடர்ந்து நீ பள்ளிக்கு சைக்கிளில் செல்ல கூடாது ஆட்டோவில் தான் செல்ல வேண்டும் என்றும் அவரது மகளை காதலிப்பதாக கூறியும் தொந்தரவு செய்து வந்துள்ளார்.இந்நிலையில் கடந்த 27.06.2025ம் தேதி 23.00 மணிக்கு புகார்தாரரும் அவரது மகள்கள் ஹானஹாபிசா, அஸ்ரின்பிடா இருவரு;k வீட்டில் இருந்தபோது மேற்படி எதிரி முகமது அப்சல் என்பவர் வண்டி எண் இல்லாத

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:08:25 +0530

Grey Colour R15 இருசக்கர வாகனத்தில் புகார்தாரர் வீட்டிற்கு வந்து புகார்தாரரையும் அவரது மகள்களையும் ஏண்டி தேவுடியா முண்டைகளா வெளியே வாங்கடி என்று கூறிக்கொண்டே கையில் வைத்திருந்த பெட்ரோல் கேனை எடுத்து அவரது வீட்டில் கிடந்த செருப்பின் மீது ஊற்றி எரித்தும் ரூ.1000/- மதிப்பிலான சேதத்தை ஏற்படுத்தியும் அருகில் நின்ற அவரது மகள் பள்ளி செல்லும் சைக்கிளையும் இடுப்பில் வைத்திருந்த கத்தியால் குத்தி பஞ்சர் ஆக்கியும் புகார்தாரரை பார்த்து உனது மகளை எனக்கு திருமணம் பண்ணி தரவில்லையென்றால் இதுபோல் உன்னையும் உனது குடும்பத்தையும் எரித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டி குற்றம் புரிந்ததாக அரசு தரப்பில் சொல்லப்பட்ட நிலையில், இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 சம்பவத்தன்று யாரோ ஒரு நபர் தனது வீட்டு வாசலில் முன்பு கிடந்த செருப்புகளை எரித்தும் சைக்கிளை டயரை கத்தியால் குத்தி சேதமாக்கி அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்று சாட்சியம் அளித்துவிட்டு அதன்பின்பு எதிரி மேற்சொன்ன சம்பவத்தை செய்துள்ளார் என முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்,. மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் எதிரியுடன் சமரசமாக செல்வதாக கூறி சமரச மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அந்த மனுவில் உள்ள எ.மா.சா.ஆ.1 முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் எதிரி மீது நடவடிக்கை எடுக்க தேவையில்லை என்றும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அதில் என்ன எழுதியுள்ளது என்று தனக்கு தெரியாது என சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பு வழக்கை முழுமையாக பாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

10. மேலும் இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்ட அ.சா. 2 எதிரியை தனக்கு தெரியும் என்றும் தனது உறவினர் தான் என்றும் எதிரி மீது தனது மகள் எதற்காக புகார்கொடுத்தார் என்ற விவரம் தனக்கு சரியாக தெரியாது என்றும் இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவக்கூடியதாக இல்லை.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:08:38 +0530

11.மேலும் இவ்வழக்கில் பார்வைமகசர் சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்ட அ.சா. 3 எதிரியை தனக்கு தெரியும் என்றும் ஆனால் அவர் மீது என்ன வழக்கு என்று தெரியாது என்றும் பார்வைமகசரில் தன்னுடைய கையெழுத்து இல்லை என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளது இவ்வழக்கில் புலன் விசாரணை முறையாக மேற்கொள்ளப்பட்டதா என்ற பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்துகிறது.

12.மேலும் இவ்வழக்கில் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்ட அ.சா. 4 சம்பவத்தை குறித்து சாட்சியம் அளித்துள்ள போதிலும் சம்பவத்தோடு எதிரியை தொடர்பு படுத்தி தனது முதல் விசாரணையில் எந்த வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், தனது அம்மாவான அ.சா.1 சந்தேகத்தின் பேரில் எதிரி மீது புகார்அளித்ததாகவும் தனது முதல்விசாரணையில் சாட்சியம்அளித்துள்ளதுல் தனது குறுக்கு விசாரணையில் எதிரியுடன் சமரசமாக செல்வதாக கூறி சமரச மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அந்த மனுவில் உள்ள எ.மா.சா.ஆ.2 இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் எதிரி மீது நடவடிக்கை எடுக்க தேவையில்லை என சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைந்துள்ளது.

13. மேலும் இவ்வழக்கின் புகார்மனுவை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து, எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரம் குறித்து அ.சா.5 சாட்சியம் அளித்துள்ள போதிலும், எதிரியின் குற்றச்செயல்களை இணைக்கக்கூடிய வகையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் ஏதும் அமையாத நிலையில், அரசு தரப்பில் சொல்லப்பட்டது போல மேற்படி குற்றச் சம்பவம் நடைபெற்றதா என எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:08:47 +0530

14. எனவே, இறுதியாக எதிரி பிரிவுகள் 78(2), 329(4), 296(b), 326(f), 351(3) BNS BNS கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரியை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் P.R.146/2025 ல் கட்டுப்பட்டுள்ளதும், அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதுமான வழக்கு சொத்தான பாதி எரிந்த நிலையில் சுமார் 9 Inch அளவு கொண்ட purple நிற பெண் செருப்பு ஒரு ஜோடி மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதுமான வழக்கு சொத்தான பாதி எரிந்த நிலையில் சுமார் 8 Inch அளவு கொண்ட கருப்பு நிற பெண் Shoe ஒரு ஜோடி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய வழிமுறைகளை பின்பற்றி அழித்தல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் P.R.No.146/2025 ல் கட்டுப்பட்ட மற்றொரு வழக்குச் சொத்தான பதிவெண் பலகை இல்லாத Chassis No. ME1RG67L6R0039741, Engine No. G3N4E0750158 என்ற Grey நிற Yamaha R15 இருசக்கரவாகனம் 17.07.2025 ம் தேதி Cr.M.P.No. 363/2025 ல் ஏற்பட்ட உத்தரவின் மூலம் அதன் உரிமையாளரான தஸ்லிம்பானு என்பவர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மேற்படி இடைக்கால பொறுப்பும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அதன் உரிமையாளர் வசம் நிரந்தரமாக ஒப்படைக்கப்படும் என உத்தரவிடப் படுகிறது. மேலும் அவர் எழுதி கொடுத்த பிணைய பத்திரம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் நேரடியாக அதை கணினியில் வைத்து சரிபார்க்கப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 10 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:08:57 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

JMC, Thiruvadanai-CC No.237/2025
Judgment Dated: 10.06.2026

அரசு தரப்பு சாட்சிகள் :–

1. அ.சா.1 திருமதி.அல்பெனாசிர்
2. அ.சா.2 திரு.சர்தார்கான்
3. அ.சா.3 திரு.சீனிஇப்ராகின்சா
4. அ.சா.4 திரு.ஹனாஹபிசா
5. அ.சா.5 திரு.கோவிந்தசாமி (தலைமை காவலர்)

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

1. அ.சா.ஆ.1 01.07.2025 புகார்மனு
2. அ.சா.ஆ.2 01.07.2025 முதல் தகவல் அறிக்கை
3. அ.சா.ஆ.3 01.07.2025 பார்வை மகஜர்
4. அ.சா.ஆ.4 01.07.2025 மாதிரி வரைபடம்
5. அ.சா.ஆ.5 01.07.2025 செருப்பு மற்றும் Shoe ஆகியவற்றை கைப்பற்றிய அத்தாட்சி
6. அ.சா.ஆ.6 01.07.2025 Yamaha R15 இருசக்கரவாகனம் கைப்பற்றிய அத்தாட்சி
7. அ.சா.ஆ.7 01.07.2025 படிவம் 91
8. அ.சா.ஆ.8 01.07.2025 படிவம் 91
9. அ.சா.ஆ.9 01.07.2025 Yamaha R15 இருசக்கரவாகனத்தின் புகைப்படம்

அரசு தரப்பு சான்று பொருட்கள் :–

1. அ.சா.பொ.1 எரிந்த நிலையில் சுமார் 9 Inch அளவு கொண்ட purple நிற பெண் செருப்பு ஒரு ஜோடி
2. அ.சா.பொ.2 பாதி எரிந்த நிலையில் சுமார் 8 Inch அளவு கொண்ட கருப்பு நிற பெண் Shoe ஒரு ஜோடி

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:09:23 +0530

JMC, Thiruvadanai-CC No.237/2025
Judgment Dated: 10.06.2026

<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் சான்று பொருட்கள்:–</u>

1. எ.மா.சா.ஆ.1 சமரசமனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்
2. எ.மா.சா.ஆ.2 சமரசமனுவில் உள்ள அ.சா. 4 ன் கையொப்பம்

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.10 17:09:30 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

குறிப்பு :–

1. எந்த ஒரு சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.